**அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2012**

-----------------------------------------------------------------------------------------------------------------------

அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

--------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

அம்புலுவாவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களுடன், அந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முறையான கணக்கீட்டுக் கட்டமைப்பொன்று செயற்படுத்தப்படாமை, பிரதான நிதி மூலங்களின் பதிவேடு, உரிய பயன்பாட்டு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படாமையால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீது நம்பிக்கை கொள்ளல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(அ) 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத்திலிருந்து காசோலை மூலம் நிதியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 13,619,222 தொகையான பணம் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தமை மற்றும் அப்பணம் செலவிடப்பட்ட முறையினை காண்பிக்காமை.

(ஆ) ஆண்டினுள் கட்டிட நிர்மாணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,049,811 தொகையான மூலதன செலவினமொன்று வருமான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை.

(இ) தொலைபேசி கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக தள வசதிகளை வழங்குவதற்காக தனியார் தொலைபேசி கம்பனியொன்றுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம், 2010 யூன் முதல் 2015 யூன் வரை மாதமொன்றிற்கு ரூபா 54,000 மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் காலப்பகுதிக்குரிய எதுவித பணமும் பெறப்பட்டதாக அல்லது பெறவேண்டியதாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மற்றுமொரு தனியார் தொலைபேசி நிறுவனமொன்றிற்கும் தொலைபேசி கோபுர வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய உடன்படிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையால் இந்த பணம் கிடைத்ததா அல்லது முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாமை.

(உ) பொது நம்பிக்கை பொறுப்பாளரிடமிருந்து கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றுள்ள மீதி சான்றுறுதிப்படுத்தல்களின் பிரகாரம் நிதியத்தின் மூலதன மற்றும் வருமான செலவினங்களுக்காக முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 20,109,170 செலவிடப்பட்டுள்ளதாகவும், அந்த தொகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வாறானதொரு நிலைமை காண்பிக்கப்பட்டிராமை.

(ஊ) நம்பிக்கை பொறுப்பாளர் நிதியத்தால் நிதியத்திற்கு கிடைத்திருந்த பணத்தை நிதியத்திற்கு வழங்குவதற்கு பதிலாக நிதியத்தின் தலைவரின் மருத்துவ வசதிகள், விமான பயணச்சீட்டுக்கள், தங்குமிட கட்டணங்கள் போன்றவற்றுக்காக செலுத்தப்பட்ட ரூபா 4,251,044 தொகை மற்றும் 13,112 சிங்கப்பூர் டொலர் தொடர்பில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பொது நம்பிக்கை பொறுப்பாளரால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,000,000 இற்கு மோட்டார் வாகனமொன்று தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு அது நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை கணக்குகளில் காட்டப்படாததுடன், அவ்வாறானதொரு வாகனம் நிதியத்தின் வசம் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) முன்னைய ஆண்டுகளில் உயிர்ப் பல்வகைமை நம்பிக்கை பொறுப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரூபா 6,670,000 பெறுமதியான 03 கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிராமை.

(ஐ) அம்புலுவாவ நிதியத்திற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளரால் 2009 ஒக்தோபர் 25 ஆந் திகதி தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 15,000,000 தொகையான நிலையான வைப்புகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,375,000 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை.

(ஒ) மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,213,336 தொகையான பூங்கா ஊழியர் சம்பளம், கட்டுமான கூலி மற்றும் நிலத்தை பண்படுத்தல் செலவினம் ஆகியன நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஓ) மீளாய்வாண்டினுள் ஊழியர் நலன்புரி நிதியத்தினதும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினதும் ரூபா 274,168 கூட்டுத்தொகையான பங்களிப்பு பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) அம்புலுவாவ உயிர்ப் பல்வகைமை அலகிற்கு நன்கொடையாக கிடைத்திருந்த 04 தண்ணீரப் பம்பிகள் மற்றும் கை உழவு இயந்திர என்ஜின் மற்றும் மின் பிறப்பாக்கி ஆகிய சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் வருமான செலவின கணக்குகளில் காணப்படும் பினவரும் கணக்கு விடயங்கள் தொடர்பில் அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் முன்வைக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| **கணக்கு விடயம்** | **பெறுமதி** | **முன்வைக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 1,500,000 | (i) பட்டோலை<br>(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| வங்கி மீதி | 2,825,869 | வங்கிச் சான்றிதழ் |
| நிலையானச் சொத்துக்கள் | 333,679,802 | நிலையான சொத்துப் பதிவேடு |
| தொலைத்தொடர்பு வருமானம் | 5,802,000 | (i) பற்றுச்சீட்டு<br>(ii) வருமானப் பதிவேடு |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) அம்புலுவாவ உயிர்ப் பல்வகைமை கட்டிட நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2009 ஒக்தோபர் 02 ஆந் திகதிய குழு கூட்டத்தின் தீர்மானம் இலக்கம் I | மீளாய்வாண்டிற்காக 12 கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின், | |
| 04.3 ஆம் பந்தியின் (அ) முதல் (உ) வரையான பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கை, நிதியப் பாய்ச்சல் கூற்று, திரண்ட நிதியத்திலான மாற்றங்களை காட்டும் கூற்று, பிரதான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான விரிவான குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 395 | மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| ii. நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை. | போதியளவான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 1,474,810 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,445,389 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,920,199 ஆன வீழ்ச்சியொன்றினை காணக்கூடியதாக இருந்தது.

### 3.2 வருமான நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய மிகவும் அழகான காட்சிகளுடன் கூடிய அம்புலுவாவ, கண்டி – நுவரெலியா வீதியின் எல்லையில் அமைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் 1,225 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர். அத்துடன், ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 367,500 ஆக இருந்தமையால் கண்கவரும் தன்மையில் பலனொன்று கிடைத்திருக்கவில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரசாங்க மானியம் ரூபா 10,500,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த அனைத்து வசதிகளுடனும் கூடிய 02 சுற்றுலா விடுதிகள் நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்டதெனினும், மீளாய்வாண்டின் வருமானமாக ரூபா 54,000 மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

**JM - 2770 இலக்க டொயட்டா லேண்ட் குஷர் ஜீப் வண்டினை விற்பனை செய்தல்**

அம்புலுவாவ நிதியத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது தேசிய நீர் வாங்கல் சபையிடம் ரூபா 3,431,400 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட டொயட்டா லேண்ட் குஷர் ஜீப் வண்டி பாவனைக்கு உகந்த நிலையில் காணப்படாமையால், விற்பனை செய்யக்கோரி, பிரதமரின் இணைப்புச் செயலாளரொருவர் 2012 சனவரி 20 ஆந் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்பட்டு விற்பனை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததெனினும் வாகனம் தொடர்பில் மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகைகள் நடைமுறையொன்றினைப் பின்பற்றாமல் 2012 சனவரி 26 ஆந் திகதி ரூபா 3,400.000 தொகைக்கு ஜீப் வண் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

ஜய வாவியினை அகலமாக்கும் ஒப்பந்தமானது திறந்த மக்கள் போட்டியொன்றின் மூலம் கையளிக்கப்படாதிருந்ததுடன், ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் அளவிடைப் பத்திரங்கள் மற்றும் ஒப்பந்ததாரர் பட்டியல்கள் இன்றி ரூபா 1,206,159 தொகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,761,920 பெறுமதியான பொருட்கள் பெறுவனவு மற்றும் விநியோக இருப்புப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

அரசாங்க மானியம் ரூபா 1,800,000 இனை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த தளபாடங்களுடன் கூடிய கெபடேரியா வெதுப்பகம் வெளித்தரப்பினருக்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்புலுவாவ நுழைவாயில் அருகே ரூபா 1,270,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 03 கடைகள் மூடி வைக்கப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து ஆக்கபூர்வமான வருமானமொன்றினை ஈட்டுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க மானியம் ரூபா 10,000,000 இனை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட அனைத்து அம்சங்களுடனும் கூடிய மண்டபமொன்று நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதிலும் அது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமையால் பாழடைந்து காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதியம் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் காலதாமதம் ஒரு வருடமாகவும் காணப்பட்டது.

### 5.2 செயலாற்றல்

அம்புலுவாவ உயிர்ப் பல்வகைமை கட்டிடத் தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2009 இன் 44 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) முதல் (கே) வரையான 20 நோக்கங்களில் 03 நோக்கங்களை தவிர ஏனைய வெளிவாரியான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பெறுகைகள் திட்டம்

நிதியத்தின் கொள்வனவுகள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பில் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) உள்ளக கட்டுப்பாடு

(இ) கணக்கீடு